**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## OS.NO. 26/2020 PW-5

| | |
|---|---|
| Name | மணிவர்மன் |
| Husband/Father Name | சின்னப்பா |
| Village /Area | மருதம்பாக்கம் |
| Taluk | |
| Occupation | விவாசயம் |
| Age | 55 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 12.03.2025 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

எனது சாட்சியத்தை பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். எனக்கு படிக்க தெரியும். நான் சொன்னதைதான் டைப் செய்யப்பட்டுள்ளது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தில் கண்டுள்ள விவரங்கள் உங்களுக்கு தெரியுமா என்றால் ஆமாம். தாவா சொத்து யார் யார் பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் என் அப்பா சின்னாப்பா மற்றும் வடிவேல், குப்புசாமி, வெங்கடேசன் ஆகியோர் பெயரில் உள்ளது. தாவா சொத்தின் அளவு என்னவென்றால் எனக்கு துல்லியமாக தெரியாது. மேற்சொன்ன சொத்தை நீங்கள் அனைவரும் பாகம் பிரித்து கொண்டிர்களா என்றால் ஆமாம். உங்கள் அப்பா சின்னப்பாவுக்கு எவ்வளவு அளவுள்ள நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் காலி இடமாக உள்ளது ஆனால் எனக்கு அளவுகள்

தெரியாது. அந்த இடத்தில் யார் யார் வீடுகள் கட்டியுள்ளார் என்றால் மூன்று வீடுகள் உள்ளது. அதன் உரிமையாளர்கள் யார் என்றால் கோவிந்தசாமி, குப்புசாமி மற்றும் வடிவேல் ஆகியோர்கள் ஆவார்கள்.

பொது வழியில் தடுப்பு சுவர் கட்டியுள்ளதாக சொல்லியுள்ளீர்கள் அது எந்த திசையில் கட்டப்பட்டுள்ளது என்றால் வடக்கு தெற்காக உள்ளது. அந்த சுவரின் நீளம், அகலம், உயரம் நீங்கள் சொல்லவில்லை என்றால் ஆமாம். உங்களுக்கு நேரடியாக வழக்கு விவரம் தெரியாமல் வாதி சொல்லி கொடுத்ததன் பேரில் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் அந்த இடத்தில் வழியும் கிடையாது பிரதிவாதி எந்த சுவரையும் கட்டவில்லை என்றாலும் சரயில்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

NAVEEN DURAIBABU    Digitally signed by NAVEEN DURAIBABU

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.